සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development
කාන්තා, ළමා කටයුතු සහ සමාජ ආරක්ෂණ අමාත්‍යාංශය - සමාජ ආරක්ෂණ අංශය
மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சு - சமூகபாதுகாப்பு பிரிவு
Ministry of Women, Child Affairs and Social Security – Social Security Division

**சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி சுற்றறிக்கை 2020/04**

சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர்கள்,
சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்க முகாமையாளர்கள்,
கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர்கள், ஆகியோருக்கு

**சமுாத்தி நிவாரணம் பெறுவோருக்கான ‘சஹனபியவர’ – சலுகைக் கடன் திட்டத்தினை அறிமுகப்படுத்தல்**

**01. அறிமுகம்**

தற்பொது பரவிவருகின்ற கொவிட் - 19 அல்லது புதிய கொரோனா வைரசைத் தடுக்கும் பொருட்டு அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ அவர்களின் ஆலோசனைகளின் பிரகாரம் உருவாக்கப்பட்டள்ள ஜனாதிபதி விசேட செயலனி உட்பட அரசாங்கத்தினால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சமுர்த்தி நிவாரணம் பெறுவோர் உட்பட குறைந்த வருமானம் பெறுவோரின் பொதுவான பொருளாதார நடவடிக்கைகளை வழமை போன்று நடாத்திச்செல்வதில் கஸ்டங்கள் ஏற்படுவதனடிப்படையில் அவர்களது வருமான நிலையானது நிரந்தரமற்ற நிலைக்குள்ளாவதனடிப்படையில் நாளாந்த வாழ்கைத்தரத்திற்கும் தாக்கங்கள் ஏற்படலாம்.
அதற்கு தீர்வொன்றை சமுர்த்தி நிவாரணம் பெறும் கட்டாய சேமிப்பு கணக்குடையவர்களுக்கு விசேட சலுகையுடனான கடன் ஒன்றை வழங்கும் நோக்கில் சஹனபியவர – சலுகைக்கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்படுகின்றது.

**02. இலக்குக் கழு**

தற்பொது சமுாத்தி நிவாரணம் பெறும் கட்டாய சேமிப்பு கணக்குடையோர்

03. உயர்ந்த பட்ச கடன் தொகையும் தேவைப்பாடும்.

உச்ச பட்ச கடன் தொகையானது ரூபா 10000/= ஆகும். ஒரு முறையில் உயாந்த பட்சமானது ரூபா 5000/= என்ற வகையில் கடன் தொகையினை இரு சந்தப்பங்களில் விடுவித்தல் வேண்டும்.நுகர்வு மற்றும் அவசரத் தேவையின் நிமிர்த்தம் கடனை விடுவித்தல் வேண்டும்.

**04. வட்டி வீதமும் கடனை மீளச்செலுத்தம் கால எல்லையும்**

இக்கடன் தொகையானது வட்டியின்றி வழங்கப்படுவதுடன் சலுகைக் காலமானது 6 மாதங்களாகும். இச் சலுகைக் காலத்தின் பின்னர் 12 மாதங்களுக்குள் மாதாந்த தவணையாக வட்டித்தொகையின்றி அறவிட்டுக்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

**05. பிணைகள்**

கட்டாய சேமிப்புக் கணக்கின் மீதியானது ( வழங்கும் கடன் தொகையானது குறித்த தினத்திலுள்ள மீதியில் 80% இருத்தல் வேண்டும் ) பிணையாகும்.பிற பிணைகள் பெற்றுக்கொள்ளத் தேவையில்லை.

**06. கடன் விண்ணப்பப்படிவமும் ஏனைய ஆவணங்களும்**

இணைப்பு – 01 இன் மூலம் அறிமுகப்படுத்தப்படுகின்ற கடன் விண்ணப்பப்படிவத்தினை பயன்படுத்ததல் வேண்டும். ஏனையவைகளுக்காக தற்போது அறிமுகப்படுத்தியுள்ள ஆவணங்களை பயன்படுத்துதல் வேண்டும்.

1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General | අධ්‍යක්ෂ (පාලන හා ආයතන) / பணிப்பாளர் ( நிர்வாகம்/தாபனம்) / Director (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී / பிரதான கணக்காளர் / Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) / பணிப்பாளர் (குறு நிதி ) / Director ( Micro Finance) | කාර්යාලය / அலுவலகம் / Office |
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |
| | | **Hot Line :0112-889007** | | | |

07. **கடனை அங்கீகரிப்பதும் விடுவிப்பதும்**

- ❖ கட்டுப்பாட்டுச்சபை மேவுகை அங்கிகாரத்திற்கு இசைவாக கடனை விடுவித்தல் வேண்டும்.

- ❖ போதுப் பேரேட்டில் குறியீட்டு இலக்கம் …………கீழ் கிடைக்கவேண்டிய கடன் கணக்கு சஹனபியவர - சலுகைக்கடன் திட்டம் என்ற பெயரில் புதிய கணக்கு ஒன்றினை ஆரம்பித்து பராமரித்துச் செல்லல் வேண்டும்.

- ❖ இக்கடன் வேலைத்திட்டத்தின் பொருட்டு கடன் மற்றும் கூட்டுக்காப்பீட்டு வேலைத்திட்டங்களின் பங்களிப்பு தேவையற்றதாகும்.

08. தற்போது பரவிவருகின்ற நோய் நிலைமையிலிருந்து வங்கிப்பணியாளர்களையும் வாடிக்கையாளர்களையும் பாதுகாக்கும் நோக்கில் கீழுள்ளபிரகாரம் விடுவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

- ❖ கடன் தேவைப்படும் சமுர்த்தி பயனாளிகளின் பொருட்டு கடன் விண்ணப்பப்படிவங்களை பிரிவுப் பொறுப்பு உத்தியோகத்தர்கள் அல்லது சமுதாய அடிப்படை அமைப்புக்களின் தலைவாகள்/செயலாளர்கள் ஊடாக வழங்குதல் வேண்டும்.

- ❖ பிழையின்றி பூர்த்தி செய்யப்பட்ட கடன் விண்ணப்பப்படிவங்களை பிரிவுப் பொறுப்பு உத்தியோகத்தர்கள் ஊடாக சேகரித்துக்கொள்ளல் வேண்டும். அதன்பொருட்டு சமுதாய அடிப்படை அமைப்புக்களின் தலைவரின்/ செயலாளரின் ஒத்துழைப்பினை குறித்த உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

- ❖ தகுதியினையுடைய கணக்குடையோருக்கு கடன் தொகைக்குரிய பணத்தினை பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி உத்தியோகத்தரிடம் ஒப்படைத்தல் வேண்டும். அங்கு குறித்த தொகையினை உத்தியோகத்தர் பொறுப்பேற்றதாக பதிவேடு ஒன்றில் பதிந்து கையொப்பத்தினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். மேலும் சமுர்த்தி வங்கியினூடாகவும் கடனைப் பெறுபவருக்கு கடனை வழங்குவதற்கும் அனுமதியுண்டு.

- ❖ விடுவித்த கடன் தொகையினை பிரிவுப்பொறுப்பு உத்தியோகத்தரால் குறிப்பிட்ட கணக்குடையோருக்கு ஒப்படைத்ததாகவும் பொறுப்பேற்றதாகவும் கையொப்பத்துடன் கடிதமொன்றினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அதற்குத் தேவையான ஆவணத்தினை வங்கியால் தயாரித்து வழங்குதல் வேண்டும் இதன் பொருட்டு காசுபற்றுப் படிவத்தினையும் பயன்படுத்த முடியும்.

- ❖ பணத்தை ஒப்படைத்ததற்கான சான்றிதழை 03 நாட்களுக்குள் முகாமையாளரிடம் ஒப்படைக்க வேண்டியதுடன் அது தொடர்பில் பராமரிக்கப்படுகின்ற மேற்படி பதிவேட்டில் குறிப்பிடல் வேண்டும். மேலும் அச்சான்றிதழை வங்கியில் பாதுகாப்பாக ஆவணப்படுத்தி வைத்தல் வேண்டும்.

09. இக்கடன் வேலைத்திட்டத்தின் கீழ் கடனை வழங்கும் பொருட்டு தேவையான நிதியங்களை கிராமிய கடன் தேவைப்பாடுகள் கணக்கிலுள்ள ( குறியீட்டு இலக்கம் 4033) மீதியினை அடிப்படையாக ஆக்கிக் கொள்ளல் வேண்டும். கடனை விடுவிப்பதற்கு பணம் இல்லாத சந்தர்ப்பத்தில் ஏற்கனவே முதலீடு செய்துள்ள நிதியினை பெற்றுக்கொள்ள சந்தாப்பம் வழங்கப்படும்.

10. வழமையான பிரகாரம் முதலீட்டின் பொருட்டு குறுநிதிப்பிரிவிற்கு அனுப்பப்படுகின்ற கட்டாய சேமிப்பு நிதியத்தின் பொருட்டான வட்டி வருமானம் செலுத்தப்படும் என்பதனை மேலும் அறியத்தருகின்றேன்.

11. இக் கடன் வேலைத்திட்டத்தின் கீழ் விடுவிக்கப்படுகின்ற கடன் தொகை தொடர்பான முன்னேற்றத்தினை வாரத்திற்கொருமுறை மாவட்ட சமுர்திப்பிரிவிற்கும் இருவாரத்திற்கொருமுறை குறுநிதிப்பிரிவிற்கு bank@samurdhi.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரியின் ஊடாக அனுப்புவதற்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

12. இக்கடன் வேலைத்திட்டத்தின் கீழ் வங்கிக்கும் பிரிவுப் பொறுப்பு உத்தியோகத்தர்களாலும் பணத்தை களத்திற்கு எடுத்துச் செல்லும் போது ஏற்படுகின்ற பாதுகாப்பற்ற நிலையினை தவிர்த்துக் கொள்வதற்காக வழிப்பயன பணக்காப்பீட்டு வேலைத்திட்டத்தின் கீழ் பாதுகாப்பினை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

13. இக்கடன் வசதிகள் வழங்கப்படுவது எம்மால் விஷேடமாக பாராமரிக்கப்பட வேண்டியவர்களான சமுர்த்தி பயனாளிகளாகும் என்பதாலும் இன்று விஷேடமாக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விஷேட செயலணி மற்றும் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பினை வழங்குதல் என்ற அடிப்படையிலாகும். ஆகையால் வங்கி மற்றும் களப்பணியாளர்கள் விஷேடமான முக்கியத்துவத்தினை முன்நிறுத்தி இக்கடன் வேலைத்திட்டத்தின் கீழ் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

14. இந்த பாதுகாப்பற்ற சந்தப்பத்தில் அரசாங்கத்தால் செயல்படுத்தப்படுகின்ற விஷேட ஆலோசனைகள் மற்றும் தீர்மானங்களுக்கேற்ப செயற்பட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சுட்டிக்காட்டுகின்றேன்.

15. இக்கடன் வேலைத்திட்டத்தின் கீழ் கடனை விடுவிப்பது, ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டவுடன் சமுர்த்தி வங்கி அல்லது பிரிவுப் பொறுப்பு உத்தியோகத்தர் ஊடாக சமுதாய அடிப்படை அமைப்பு உத்தியோகத்தர்களின் பங்கேற்பு மற்றும் உறுதிப்பாட்டின் பொருட்டு கையொப்பத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இங்கு கடன் விண்ணப்பப்படிவத்தை அச்சிடுவதில் சிரமங்கள் ஏற்படுவதாயின் குறித்த கணக்குடையோரிடமிருந்து கோரிக்கையொன்றினைப் பெற்றுக் கொண்டு கடனை வழங்கமுடியும் அங்கு CR புத்தகம் ஒன்றினைப் பயன்படுத்தி கடன் தொகையினைப் பொறுப்பேற்றதாகவும் , ஒப்படைத்ததாகவும் கையொப்பங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள சந்தப்பங்களில் ஜனாதிபதியின் செயலாளரால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் அவசரப்பணியொன்றாகக் கருதி உரிய பிரிவுகளுடன் ஒருங்கிணைப்புக்களை ஏற்படுத்திக் கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறியத்தருகின்றேன்.

ஆர்.பீ.பி.திலக்கசிறி
பணிப்பாளர் தலைமையதிபதி

**பிரதிகள்:**01. கௌரவ அமைச்சர் திருமதி..பவித்திராதேவி வன்னி ஆரச்சி
மகளிர் சிறுவர் விவகாரம் மற்றும் சமூகப்பாதுகாப்பு அமைச்சு – த.கூ.க.பொரு
02. ஜனாதிபதி செயலாளர்,
கலாநிதி .பீ.பி.ஜயசுந்தர, ஜனாதிபதி செயலகம் - த.கூ.க.பொரு
03. செயலாளர்,
மகளிர், சிறுவர் விவகாரம் மற்றும் சமூகப்பாதுகாப்பு அமைச்சு – த.கூ.க.பொரு
04.செயலாளர், சமூகப்பாதுகாப்பு, ராஜாங்க அமைச்சு – த.கூ.க.பொரு

05.கணக்காய்வாளர் தலைமையதிபதி
கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களம் - த.கூ.க.பொரு

06.பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.கூ.க.பொரு

07. பணிப்பாளர், குறுநிதி
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.கூ.க.பொரு

08. சகல மாவட்ட செயலாளர்கள்/
மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதிகள்
மாவட்ட செயலகம் - த.கூ.க.பொரு
உ.ந.பொருட்டு

09.சகல மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்கள்
மாவட்ட செயலகம் - உ.ந..பொரு

10.சகல பிரிவுத் தலைவர்கள்
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - உ.ந..பொரு

11.சகல பிரதேச செயலாளர்கள்
பிரதேச செயலகம் - த.கூ.க.பொரு
உ.ந.பொருட்டு

12. சகல தலைவர்கள்
சமுதாய அடிப்படை அமைப்புக்கள் - உ.ந.பொரு